செ.வெ.எண்.619 நாள்.05.12.2017

**<u>வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதால் காஞ்சிபுரம் கடற்கரையோர கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் மறுஅறிவிப்பு வரும் வரை கடலுக்குள் செல்ல வேண்டாம் – மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் எச்சரிக்கை</u>**

******************

அந்தமான் கடல் பகுதியில் வலுவான காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று பின்னர் புயலாக மாறி வடமேற்கு திசையில் நகர்ந்து வட தமிழ்நாடு காஞ்சிபுரம் கடலோர பகுதிகளில் மையம் கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுவதால் மீனவர்கள் யாரும் கடலுக்குள் செல்ல வேண்டாம் என அறிவுருத்தப்படுகின்றனர், இருப்பினும் ஏற்கனவே கொடுத்த அரசு அறிவிப்பினை மீறி சிலர் கடலுக்குள் செல்வதாக அறியப்படுகிறது. இது மிகவும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் . எனவே மீனவர்கள் யாரும் அலட்சியமாக இருக்காமல் மறு அறிவிப்பு வரும் வரை யாரும் கடலுக்குள் செல்ல வேண்டாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்